**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.41/2018**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சின்னராஜன் | மதம் | : இந்து |
| த/பெ | : பரசுராம செட்டி | ஜாதி | : -- |
| வயது | : 73 | கிராமம் | : கிருஷ்ணசமுத்திரம் என்ற பெருங்குமி |
| தொழில் : | விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

20.08.2025

**<u>வா.சா.1 மனுவின் பெயரில் திரும்ப அழைக்கப்பட்டு 2 முதல் 5 பிரதவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் கண்ணம்மாள் மற்றும் அவரது மகன்கள் பட்டாபி, சேகர் ஆகியோருக்கு பாத்தியம் ஆகும். கண்ணம்மாள் என்பவரை எனக்கு எப்படி தெரியும் என்றால் மாணிக்க ரெட்டியின் மனைவி ஆவார். என் வீட்டிற்கு எதிரில் இருந்தார்கள். தாவா சொத்து கண்ணம்மாளிடம் இருந்து கிரையம் பெற்றதாக சொல்வதில் வழக்கு சொத்து கண்ணம்மாளுக்கு பாத்தியம் என்பதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் SLR நகல் வாங்கி தாக்கல் செய்துள்ளேன். SLR ஆவணம் மட்டுமே கண்ணம்மாளின் உரிமையை நிரூபிக்கும் ஆவணம் ஆகாது என்றால் 60 வருடங்களுக்கு வில்லங்கம் போட்டு பார்த்தோம். காவல் ஆய்வாளர்தான் நீதிமன்றத்தில் பார்த்துகொள்ள சொன்னார்.

2. கண்ணம்மாள் எனக்கு உறவா என்றால் ஒரே ஊர். எதிர் வீடு. அவர்கள் ரெட்டியார், நாங்கள் செட்டியார். வழக்கு சொத்து கண்ணம்மாளுக்கு சொந்தம் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அவர்கள் பூர்வீகமாக வாழ்ந்து வந்த சொத்தாகும். நான் SLR, வில்லங்க சான்று, கிரைய ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். நான் SLR தவிர கண்ணம்மாளுக்கு உரிமையை காட்ட வேறு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கிராம நிர்வாக அலுவலரை சென்று பார்த்து அவர் சிட்டா, அடங்கல் ஆகியவற்றை எடுத்து பார்த்து சொன்னதன்

அடிப்படையில் முடிவு செய்தேன். சிட்டா, அடங்கல், பட்டா ஆகியவற்றை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஏன் அந்த ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் தேவைப்பட்டால் வாங்கி தாக்கல் செய்கிறேன்.

3. 3 முதல் 5 பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் என்ன பிரச்சனை செய்தார்கள் என்றால் செடி, மரம், கொடிகளை கத்தியை வைத்து வெட்டினார்கள், அவர்களது மாடுகளை கொண்டு வந்து கட்டினார்கள், பானிப்பூரி வண்டியை கொண்டு வந்து நிறுத்தினார்கள். அவ்வாறு எந்த தேதியில் இந்த பிரச்சனைகளை செய்தார்கள் என்றால் எனக்கு தேதி நினைவில் இல்லை. காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை எடுத்து வந்து வைத்துதான் சொல்ல முடியும். பிரதிவாதிகள் யார் என்றால் வழக்கு சொத்திற்கு மேற்கே உள்ள சொத்திற்கு மேற்கே உள்ளார்கள். பிரதிவாதிகள் எனக்கு உறவினர்களா என்றால் இல்லை. பிரதிவாதிகளிடம் நான் பேசிப்பார்த்தேனா என்றால் அவர்கள் பேச்சுக்கு உடன்படவில்லை.

4. பிரதிவாதிகள் ஆதியில் இருந்தே தாவா சொத்தில்தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் தவறு. உண்மையில் அனுபவித்தவர்கள் எனக்கு கிரையம் கொடுத்துவிட்டு திருத்தணிக்கு வந்துவிட்டார்கள். வழக்கு சொத்தை எந்த தேதியில் கிரையம் வாங்கினேன் என்றால் 20.10.1993ல் கிரையம் வாங்கினேன். என்ன தொகைக்கு கிரையம் வாங்கினேன் என்றால் தற்போது ஞாபகம் வரவில்லை. கிரையம் வாங்கிய பின்பு நான் எவ்வாறு அனுபவித்து வருகிறேன் என்றால் கழிப்பறை குளியலறை கட்டியுள்ளேன். விறகு தட்டுமுட்டு சாமான்கள் போட்டு வைத்துள்ளேன். வழக்கு சொத்திற்கு பட்டா என் பெயரில் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. காலிமனைக்கு பட்டா கொடுக்க முடியாது என சொல்லிவிட்டார்கள்.

5. சுமார் என்ன அளவிற்கு கழிப்பறை குளியலறை கட்டியுள்ளேன் என்றால் 25 1/2 அடிக்கு 60 அடி வீட்டு மனையில் 7 அடிக்கு 13 அடி என்ற அளவில் புழக்கடையில் கட்டியுள்ளேன். எனக்கு சொந்தமாக வீடு உள்ளதா என்றால் வழக்கு சொத்திற்கு எதிரிலேயே உள்ளது. எனது வீட்டில் கழிப்பறை குளியலறை கட்டியுள்ளேனா என்றால் இல்லை. எனவே தான் வழக்கு சொத்தில் கழிப்பறை குளியலறை கட்டியுள்ளேன். பிரச்சனை செய்ததாக காவல் துறையில் புகார் அளித்ததற்கு நீதிமன்றத்தில் பார்த்து கொள்ள சொல்லிவிட்டதில் நான் என்ன விவரம் சொல்லி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சட்டப்படி நான் வாங்கிய

சொத்தில் பிரதிவாதிகள் அராஜகம் செய்து அனுபவிக்க பார்க்கிறார்கள் என்றும் தட்டிகேட்டால் அடிக்க வருகிறார்கள் என்றும் அனுப்பினேன்.

6. இந்த விவரங்களை காவல் துறை புகாரில் கொடுத்தேனா அல்லது வழக்கறிஞர் அறிவிப்பில் கொடுத்தேனா என்றால் இதேதான் கொடுத்தேன். எனக்கு தெரியவில்லை. ஜெகந்நாத ரெட்டி யார் என்றால் 1ம் பிரதிவாதியின் அப்பா ஆவார். வழக்கு சொத்து ஜெகந்நாத ரெட்டி பெயரில் உள்ளது என்றாலும் அதை கிராம நிர்வாக அலுவலர் என்னிடம் சொன்னாரா என்றால் அவர் பெயரில் இல்லை. ஜெகந்நாதன் என்பவர் ரெட்டியார் இல்லை. மாணிக்கம் ரெட்டியின் திருமணத்திற்கு ஜெகந்நாதன் மகன் கொரபுட்டுக்கானுக்கு ரூ.101/—க்கு அடமானம் வைத்துள்ளார்கள். அந்த பத்திரத்தை வைத்து கொண்டுதான் பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்கிறார்கள். யார் அடமானம் வைத்தார் என்றால் மாணிக்கம் ரெட்டியின் திருமணத்திற்காக அவரது தாயார் கன்னியம்மாள் அடமானம் வைத்துள்ளார். அவ்வாறு அடமானம் வைத்த ஆவணத்தை தாக்கல் செய்தேனா என்றால் அது பதிவு செய்யாத ஆவணமாகும். அவர்கள் கைவசம் வைத்திருந்த ஆவணத்தின் புகைப்பட நகலை வேறு ஒரு நபரிடம் இருந்து நான் பார்த்தேன். நான் அந்த புகைப்பட நகலை வழக்கறிஞரிடம் கொடுத்தேனா என்று எனக்கு ஞாபகமில்லை.

7. எந்த தேதியில் அடமானம் வைக்கப்பட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்த ஆவணத்தை நான் பார்த்தேனா என்றால் அதை அடமானம் வைத்த நபருக்கே பணத்தைகொடுத்து திருப்பிவிட்டார்கள். அவ்வாறு எந்த வருடம் பணம் கொடுத்து திருப்பப்பட்டது என்றால் எனக்கு வருடம் தெரியாது. என்ன தொகைக்கு அடமானம் வைக்கப்பட்டது என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது. மாணிக்க ரெட்டியின் மனைவி கன்னியம்மாள் என்றால் மாணிக்க ரெட்டியின் மனைவி கண்ணம்மாள் ஆவார். தாயார்தான் கன்னியம்மாள் ஆவார். கன்னியம்மாள்தான் வீடு கட்டி வாழ்ந்து வந்த இடத்தை அடமானம் வைத்ததாக எனது வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதன் பின்பு கண்ணம்மாள் பெயருக்கு சொத்து மாறிவிட்டது. கண்ணம்மாள் பெயருக்கு சொத்து மாறிவிட்டது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் SLR தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்ணம்மாள், மாணிக்கம் என உள்ளது.

8. நான் சொல்வதுபோல் அடமானம் வைக்கப்பட்ட சொத்து வழக்கு சொத்தே

இல்லை என்றாலும் அது வேறு சொத்து என்றாலும் சரியல்ல. ஜெகந்நாதன், ஜெகந்நாதன் ரெட்டி என்ற பெயர் பொருத்ததை வைத்து கொண்டு பிரதிவாதிகள் பிரச்சனை செய்து வருகிறார்கள். கன்னியம்மாள் அடமானம் வைத்த சொத்தின் புல எண்.293/15 விஸ்தீரணம் 0.34 செண்ட் என்றால் புல எண் மாறிகொண்டே வருகிறது. தற்போதைய புல எண்.413/15 ஆகும். நான் சொல்லும் புல எண்.413/15ன் பழைய புல எண்.251/1 என்றாலும் பழைய புல எண்.293/15தான் வழக்கு சொத்து என்றாலும் இல்லை. மாணிக்க ரெட்டியின் மனைவி கண்ணம்மாள் எந்த காலத்தில் சொத்தில் அனுபவத்தில் இருந்தார்கள் என்றால் நான் சிறு வயதில் இருந்து அவர்தான் அனுபவத்தில் இருந்தார்கள். நான் 1993ல் கிரையம் வாங்கினேன். எனக்கு கிரையம் கொடுத்துவிட்டு திருத்தணி வந்துவிட்டார்கள். எனக்கு வருடம் சொல்ல தெரியவில்லை. நான் சிறு வயதில் இருந்து அவர்தான் அனுபவத்தில் இருந்தார்கள்.

9. தாவா சொத்து என் அனுபவத்தில் இருப்பதை காட்ட ஏன் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரவில்லை என்றால் என்னிடம் யாரும் அதுபற்றி சொல்லவில்லை. ஜெகந்நாதன் மகன் துரைக்குதான் வழக்கு சொத்தில் முழு உரிமை உண்டு என்றாலும் எனக்கு வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றாலும் நான் பொய்யான ஆவணங்களின் அடிப்படையில் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அவர்கள் சொல்வது பொய். நான் சொல்வதுதான் மெய். நான் சொல்லும் புட்டுக்கானிடம் அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் புல எண்.293/15 என்றாலும் வழக்கு சொத்தின் புல எண்.251/1 என்றாலும் நான் தேவையில்லாமல் வேறு சொத்தை கிரையம் பெற்று விட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் இல்லை. நான் சொல்லும் அடமானம் 10.11.1945ல் ஜெகந்நாதன் பசல என்பவரது மகன் புட்டக்கான் என்பவரிடம் ரூ.175/—க்கு ஆவண எண்.3505/1945ன்படி அடமானம் வைத்துள்ளார்கள் என்றால் நான் பிறந்ததே 1953 ஆகும். நான் பிறப்பதற்கு முன்பே ஏற்பட்ட ஆவணம் என்பதால் எனக்கு அந்த விவரம் தெரியாது என்றால் ஆமாம். அந்த ஆவணத்தில் மாணிக்க ரெட்டியின் திருமணத்திற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது.

10. நான் அடமான ஆவணத்தின் நகலை வழக்கறிஞராக கொடுத்ததாக சொல்வதில் அதை நான் படித்து பார்க்காமல் கொடுத்தேனா என்றால் ஆமாம். அதில் கன்னியம்மாள் தன் மகன் மாணிக்க ரெட்டியின் திருமணத்திற்கு என

குறிப்பிட்டிருந்ததால் நான் வேறு எதையும் பார்க்கவில்லை. சொத்தை வாங்கும்போது வில்லங்கம் பார்த்தோமா என்றால் காவல் துறையில் புகார் கொடுக்கும்போது வில்லங்கம் பார்த்தேன். காவல் துறையில் உரிமையியல் பிரச்சனை என்பதால் பார்க்க முடியாது என்றும் வருவாய் கோட்டாட்சியருக்கு அனுப்ப வேண்டும் என்றும் சொல்லிவிட்டார்கள். வருவாய் கோட்டாட்சியருக்கு அனுப்ப வேண்டும் என காவல் துறையில் சொன்னார்களா என்றால் அவர்களுக்குள்ளாக அவ்வாறு பேசிக்கொண்டார்கள்.

11. முந்தைய பட்டா, அ பதிவேடு ஆகிய ஆவணங்களை பார்க்காமல் கிராம நிர்வாக அதிகாரி சொன்னதை வைத்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பட்டாபி, சேகரிடம் பழைய மக்கி போன பத்திரங்கள் இருந்தது. அது மழையில் நனைந்து மக்கிபோய் இருந்தது. பழைய ஆவணத்தில் இருந்த விவரத்தை அது மக்கி போய் இருந்ததால் என்னால் முழுமையாக பார்க்க முடியவில்லை என்றால் கிரையம் கொடுத்தவருக்கு உறவினரான ஆவண எழுத்தர் பழைய ஆவணங்களை பார்த்து எழுதி பதிவு செய்து கொடுத்தார். ஆவண எழுத்தர் கிரையம் கொடுத்தவருக்கு உறவினர் என்பதால் அவர்களுக்கு சாதகமாக ஆவணங்களை உற்பத்தி செய்து எனக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் அப்படி இல்லை. வேறு ஒருவரது சொத்தை பொய்யான ஆவணங்களை வைத்து எனக்கு கிரையம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் இல்லை.

12. ஆவண எழுத்தர் பெயர் தெரியுமா என்றால் A.G. கோபாலகிருஷ்ணா ரெட்டி ஆவார். அவர் வழக்கு சொத்தின் எந்த பக்கம் குடியுள்ளார் என்றால் எதிர் திசையில் குடியுள்ளார். தாவா சொத்திற்கு எதிரில் A.G. கோபாலகிருஷ்ணா ரெட்டி குடியுள்ளாரா என்றால் ஆமாம். A.G. கோபாலகிருஷ்ணா ரெட்டி தாவா சொத்திற்கு அருகில் குடியிருப்பதால் பொய்யான ஆவணங்களை உற்பத்தி செய்து என் பெயரில் கிரைய ஆவணம் உற்பத்தி செய்துள்ளார் என்றால் இல்லை. வழக்கு சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கு கன்னியம்மாள் பெயரிலோ, கண்ணம்மாள் பெயரிலோ ஏன் ஆவணங்களை தாக்கல் செய்ய முடியவில்லை என்றால் SLR நகல் வாங்கி தாக்கல் செய்துள்ளேன்.

13. நான் 1993ல் இருந்து கிரைய ஆவணம் மட்டும்தான் வைத்திருந்தேன் என்றால் நான் கிரையம் செய்யும்போது ஒரு முறை வில்லங்கம் போட்டு பார்த்தேன்.

நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் கண்ணம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் வழக்கறிஞர் அறிவிப்பில் மாமியார் கன்னியம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் மாமியாருக்கு பின்புதான் மருமகளுக்கு வந்துள்ளது. நான் வழக்கறிஞர் அறிவிப்பில் ஒருவிதமாகவும் வழக்கில் ஒருவிதமாகவும் மாறி மாறி முன்னுக்கு பின் முரணாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. மாமியாரின் சொத்துதான் மருமகளுக்கு வந்ததாக சொல்வதில் இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த ஆவணங்கள் இல்லை. அதை வாங்கவும் இல்லை.

14. வழக்கறிஞர் அறிவிப்பில் 10 வருடங்களாக தொந்தரவு செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் அந்த தேதியில் 10 வருடங்கள் இல்லை. காவல் நிலையத்தில் புகார் கொடுத்த தேதியில் இருந்துதான் தொந்தரவு செய்தார்கள். இன்றைய தேதியில் இருந்துதான் 10 வருடங்கள் இருக்கும். வழக்கறிஞர் அறிவிப்பில் 10 வருடங்களாக தொந்தரவு செய்ததாக குறிப்பிட்டிருந்தால் அது தவறு. 2018ல் இருந்துதான் அவர்கள் பிரச்சனை செய்கிறார்கள். அடமானம் வைக்கப்பட்ட சொத்து எது, நான் கிரையம் வாங்கிய சொத்து எது, பிரதிவாதிகள் ஆண்டு அனுபவித்த சொத்து எது என்பதே தெரியாமல் நான் இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் கிரைய ஆவணம் உள்ளது. பிரதிவாதியிடம் வழக்கு சொத்திற்கு எந்த ஆவணமும் இல்லை. கிரையத்திற்கு முன்பு கன்னியம்மாள், கண்ணம்மாள் பெயரில் எந்த ஆவணமும் என்னிடம் இல்லை என்றாலும் 1ம் பிரதிவாதி ஜெகந்நாத ரெட்டி பெயரில் அ பதிவேடு உள்ளது என்றாலும் சரியல்ல.

15. வழக்கு சொத்தின் முன் பக்கத்தில் கன்னியம்மாள் குடிசை வீடு போட்டிருந்ததாக நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் மஞ்சு (நீளமான குச்சிகள் கட்டாக) வேய்ந்த வீடுதான் வைத்திருந்தார். அதை தூலக்கட்டு வீடு என்று சொல்வார்கள். எனது கிரைய ஆவணத்தில் காலி மனை என குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் அவர்கள் திருத்தணி வந்த பின்பு அந்த வீடு இடிந்துவிட்டது. நான் வாங்கும்போது காலிமனையாகதான் இருந்தது. தாவா சொத்தில் வீடு இருந்ததற்கான எந்த அடையாளமும் இல்லை என்றாலும் பின்பக்கம் கட்டியுள்ள குளியலறை கழிப்பறை மட்டும்தான் உள்ளது என்றாலும் முன்பக்கம் காலிமனையாக உள்ளது என்றாலும் நான் கிரையம்

வாங்கும்போது காலியாகதான் இருந்தது. எனது பிரமாண வாக்குமூலத்தில் வீடு சேதமடைந்த காலி மனை என்று கூறியிருப்பதில் மாணிக்க ரெட்டி அனுபவித்ததாக எந்த அடிப்படையில் சொல்கிறேன் என்றால் மாணிக்க ரெட்டிக்கு அந்த வீடு பிடிக்காமல் வெளியூருக்கு சென்ற பின்பு வீடு சேதமடைந்து விட்டது.

16. நான் தற்போது கூறும் விவரங்களுக்கும் பிராதில் கூறியுள்ள விவரங்களுக்கும் முரண்பாடாக உள்ளது என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கியதையும் அவர்கள் பிரச்சனை செய்தது மட்டும்தான் வழக்கறிஞரிடம் அப்போது சொன்னேன். தாவா சொத்து ஆதியில் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் ஜெகந்நாத ரெட்டி மற்றும் அவர்கள் முன்னோர்கள் பெயரில்தான் இருந்தது என்றாலும் அ பதிவேட்டில் வன்னிய ஜெகந்நாத ரெட்டி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அவர்கள் சொத்து இல்லை. தாவா சொத்தின் மதிப்பு நான் வழக்கு தாக்கல் செய்த போது 1 சதுரடி ரூ.47 என என்னிடம் காட்டப்படும் வழிகாட்டி மதிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இது வேறு சொத்து. இதில் சதுரடி குறைவாக காட்டப்பட்டுள்ளது. வழக்கு சொத்திற்கு 2007லேயே 1 சதுரடி ரூ.47 வழிகாட்டி மதிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் வழக்கு சொத்து ரூ.1,04,703/– மதிப்பீடு வரும் என்றாலும் இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லை என்றாலும் நான் ரூ.42 என வழிகாட்டி மதிப்பை சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பெற்று வந்துதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

17. நான் வழக்கு சொத்தின் மதிப்பை குறைத்து காட்டி தாக்கல் செய்துள்ளதால் என் வழக்கு செல்லத்தக்கது அல்ல என்றால் நான் ரூ.42 என வழிகாட்டி மதிப்பை சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பெற்று வந்துதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து ஆதியில் இருந்தே பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும் நான் பொய்யான ஆவணங்கள் அடிப்படையில் இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளதால் என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)